<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>அசல் வழக்கு எண்.93/2015</u>

PW1 – திரு. மகாலிங்கம் நாள். 20.06.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>கூடுதல் குறுக்கு விசாரணை</u>

**1.** நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நான் வழக்கறிஞரிடம் சொன்னது ஆகும். தற்போது கூடுதலாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எங்கிருந்து எடுத்து வந்தேன் என்றால் மேற்படி ஆவணமானது ஏற்கனவே என் கைவசம் தான் இருந்தது. மேற்படி ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்யும்போது ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் பின்னர் தாக்கல் செய்து கொள்ளலாம் என வைத்திருந்தேன். மேற்படி ஆவணங்களானது வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றும், வழக்கில் காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 கூடுதல் ஆவணங்கள் யுடிஆர் காலத்திற்கு பிறகு பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். எஸ்எல் ஆர் பதிவுகள் யுடிஆர் பதிவுகளுக்கு முன்பு வந்தது என்றால் சரிதான். மேற்படி எஸ் எல் ஆர் பதிவுகளில் தாவா சொத்துகளை பொறுத்தவரை பிரதிவாதியின் பாட்டி கருப்பாயி பெயர்தான் இருந்தது என்றால் சர்வே எண்.11/8 என்கிற மட்டும் தான் அவர் பெயரில் இருந்தது. எஸ் எல் ஆர் காலத்தில் தாவா

சொத்துக்களுக்கு பிரதிவாதியின் தந்தை பிச்சைத்தேவர் பெயரிலும், அவரது பாட்டி கருப்பாயி பெயரிலும் தான் இருந்த வந்தது என்றால் சரிதான். பிரதிவாதி வாதிக்கு எதிராக அசல் வழக்கு எண்.23/2016 என்ற வழக்கில் மேற்படி எ்ஸ் எல் ஆர் ஆவணங்களில் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக வட்டாட்சியர் நடத்திய விசாரணையில் நான் கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொள்ளவில்லை. மேற்படி விசாரணையில் நான் கலந்து கொண்டேன் என்றும் வழக்கிற்காக கலந்து கொள்ளவில்லை என்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி வட்டாட்சியர் விசாரணையின் அடிப்படையில் யுடிஆர் காலத்தில் தவறாக வழங்கப்பட்டுள்ள பட்டாவை திருத்தி பிரதிவாதிகள் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா தவறு என்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களில் உள்ள பெயர்கள் தவறுதலாக மாற்றப்பட்டுள்ளது என்பதால் அதனடிப்படையில் எனக்கு எந்த வொரு பரிகாரமும் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை